# ஏப்ரல்- 24 - செவ்வாய்

புனித சிக்மரிங்கம்

**நகரின் அடித்தளம் திருமலைகளின்மீது அமைந்துள்ளது. திபா. 87:1**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி11: 19 – 26

ஆந்நாட்களில் இஸ்தேவானை முன்னிட்டு உண்டான துன்புறுத்தலால் மக்கள் பெனிசியா, சைப்பிரசு, அந்தியோக்கியா வரை சிதறிப்போயினர். அவர்கள் யூதருக்கு மட்டுமே இறை வார்த்தையை அறிவித்தார்கள் வேறு எவருக்கும் அறிவிக்கவில்லை. அவர்களுள் சைப்பிரசு, சிரேன் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிலர் இருந்தனர். அவர்கள் அந்தியோக்கியாவுக்கு வந்து அங்குள்ள கிரேக்கரை அணுகி ஆண்டவராகிய இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவரின் கைவன்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள். பெருந் தொகையான மக்கள் நம்பிக்கை கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர். இந்தச் செய்தி எருசலேம் திருச்சபையினரின் காதில் விழவே அவர்கள் பர்னபாவை அந்தியோக்கியா வரை சென்று வர அனுப்பிவைத்தார்கள். அவர் அங்குச் சென்றபோது, கடவுளின் அருள்செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார் மேலும் உறுதியான உள்ளத்தோடு ஆண்டவரைச் சார்ந்திருக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்தினார். அவர் நல்லவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்தவராய் பெருந்திரளான மக்களை ஆண்டவரிடம் சேர்த்தார். பின்பு சவுலைத் தேடி அவர் தர்சு நகர் சென்றார் அவரைக் கண்டு, அந்தியோக்கியாவுக்கு அழைத்து வந்தார். அவர்கள் ஓராண்டு முழுவதும் அந்தச் சபையாரோடு கூடவே இருந்து பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்.

**பதில்பாடல் :** பிற இனத்தாரே நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்.

## நற்செய்தி : யோவான்10 : 22 – 30

அக்காலத்தில்எருசலேமில் கோவில் அர்ப்பண விழா நடந்துகொண்டிருந்தது. அப்போது குளிர்காலம்.கோவிலின் சாலமோன் மண்டபத்தில் இயேசு நடந்து கொண்டிருந்தார்.யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, ”இன்னும் எவ்வளவு காலம் நாங்கள் காத்திருக்க வேண்டும்? நீர் மெசியாவானால் அதை எங்களிடம் வெளிப்படையாகச் சொல்லிவிடும்” என்று கேட்டார்கள்.இயேசு மறுமொழியாக, ”நான் உங்களிடம் சொன்னேன் நீங்கள் தான் நம்பவில்லை. என் தந்தையின் பெயரால் நான் செய்யும் செயல்களே எனக்குச் சான்றாக அமைகின்றன.ஆனால் நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் என் மந்தையை சேர்ந்தவர்கள் அல்ல.என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப்பின் தொடர்கின்றன.நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ளமாட்டார்.அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும்விடப் பெரியவர். அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள இயலாது. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் “என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப்பின் தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ளமாட்டார்” (திருப்பாடல் 10 :27-28) என ஆயன், ஆடுகள் உவமையை இன்றைய நற்செய்தி வாசகத்திலும் மீண்டும் ஒருதடவை வாசிக்கிறோம். இந்த நற்செய்தி வாசகத்தினை நாம் ஆழமாக உற்றுநோக்கும்போது, தனது மந்தையைச் சேர்ந்த ஆடுகளுக்கும், பிற ஆடுகளுக்கும் உள்ள வேறுபாட்டை ஆண்டவர் இயேசு விளக்குவதனை நாம் அவதானிக்கலாம். ஆண்டவர் இயேசுவின் திருவாய்மொழிக்கு அமைவாக, அவரது ஆடுகள் அவரது குரலை அடையாளம் கண்டுகொள்கின்றன. அவரது குரலுக்கு செவிகொடுக்கின்றன. அவரைப் பின் தொடர்கின்றன. அவ்வாறே மனிதர்களான நாமும் ஆண்டவர் இயேசுவை நமது ஆயனாக ஏற்றுக்கொண்டால், நாம் இந்த மூன்று செயல்களையும் செய்யவேண்டும். அதாவது நாம் அவரது ஆடுகளாக இருந்தால், அவரது குரலை அடையாளம் கண்டுகொண்டு நம்மிடம் பல வகைகளில் குறிப்பாக நற்செய்தி வழியாக, இயற்கையின் வழியாக, நம்மோடு வாழும் மனிதர்கள் வழியாகப் பேசும் அவரது அன்பின் குரலை அடையாளம் காண முடியும். நம் வாழ்வு முழுவதுமே இயேசுவைப் பின்பற்றும் ஒரு பயணம்தான். இந்த மூன்றின் வழியாக நாம் அவரது அன்பின் ஆடுகள் என்பதை எண்பித்து நாம் வாழுகிறோமா? எனவே எமது வாழ்வை மாற்றியதைக்க முயலும் நல்ல ஆயனான ஆண்டவரைப் போற்றுவோம். எங்களைத் தமது மந்தையின் ஆடுகளாகத் தேர்ந்துகொண்டதற்காக நன்றி கூறுவோம். எமது வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரது குரலை நாங்கள் அடையாளம் கண்டு, செவிமடுத்துப் பின்பற்றும் உண்மையான ஆடுகளாக வாழ வரம் தாருமென உருக்கத்துடன் மன்றாடுவோம்.